

முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, அரசு முறைப் பயணமாக அமெரிக்கா சென்றுள்ள மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் 08.07.2024 அன்று பாஸ்டனில் உள்ள உலகப் புகழ்பெற்ற ஹார்வார்டு பல்கலைக்கழகத்தில் தமிழ்நாடு மருத்துவக் கட்டமைப்பு பற்றிய விளக்க உரையாற்றினார். இந்நிகழ்வில் அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் ககன்தீப் சிங் பேடி, தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர் மருத்துவப்பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் மரு.நாராயணசாமி, ஹார்வார்டு பல்கலைக்கழக மருத்துவப் பேராசிரியர்கள் உடனிருந்தனர்.

### அமெரிக்காவில் உள்ள உலகப் புகழ்பெற்ற ஹார்வர்ட்டு பல்கலைக் கழகத்தில் சிறப்பு விருந்தினராகப் பங்கேற்பு!

# தமிழ்நாட்டில் - திராவிட மாடல் அரசின் சீர்மிகு மருத்துவக் கட்டமைப்பு - சாதனைகள்!

## மருத்துவம் – மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் விளக்கவுரை!

**பாஸ்டன், ஜூலை 11-**

**தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, அமெரிக்காவில் உள்ள உலகப் புகழ்பெற்ற ஹார்வர்ட் பல்கலைக்கழகத்தில் தமிழ்நாடு அரசின் சீர்மிகு மருத்துவக் கட்டமைப்பு மற்றும் சாதனைகளை எடுத்துரைத்து மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிர மணியன் விளக்கவுரை ஆற்றினார்.**

ஹார்வர்ட் பல்கலையில் அவர் ஆற்றிய உரை வருமாறு :-

அமெரிக்காவில் உள்ள உலகப் புகழ்பெற்ற ஹார்வர்ட் பல்கலைக்கழகத்தில் தமிழ்நாடு அரசின் சீர்மிகு மருத்துவக் கட்டமைப்பு மற்றும் சாதனைகள் குறித்து உரையாற்ற வாய்ப்பளித்த தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு எனது சிரம் தாழ்ந்த நன்றியினை தெரிவித்துக்கொள்கிறேன். மருத்துவத் துறையில் தமிழ்நாடு சிறப்பான சாதனைகள் செய்து, சுகாதாரப் பாதுகாப்பு வழங்குவதில் சிறந்து விளங்குகிறது. 1923 இல் தொடங்கப்பட்ட பொது சுகாதார அமைப்பின் மூலம் முன்னோடியாக பல்வேறு பொது சுகாதார திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள் ளது.

தமிழ்நாடு அரசு மருத்துவத் துறையில் பல்வேறு முன்மாதிரியான திட்டங்களை செயல்படுத்தியுள்ளது. ஏழை எளியோர்களுக்காக 23.07.2009 அன்று காப்பீடு திட்டத்தை தொடங்கியவர் 5 முறை தமிழ்நாடு முதலமைச்சராக இருந்த முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள். இந்த திட்டம் "முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டுத் திட்டமாக" கடந்த 3 ஆண்டுகளில் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. திட்டம் தொடங்கிய நாள் முதல் ஜுன் 2024 வரை ரூ.136.25 பில்லியன் செலவில், 14 மில்லியன் மக்கள் பயன்பெற்றுள்ளனர். மொத்தப் பயனாளிகளில், 4.32 மில்லியன் மக்கள் அரசு மருத்துவமனைகளில் ரூ.49.45 பில்லியன் செலவில் உயர்சிகிச்சைகள் பெற்றுள்ளனர். மேலும், முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் முன்னெச்சரிக்கை நோக்கத்துடனும் தொலைநோக்கு பார்வையுடன் 1999 ஆம் ஆண்டு கொண்டுவந்த மற்றொரு திட்டம் "வருமுன் காப்போம் திட்டமாகும்". இதன்மூலம் கிராமப்புற மற்றும் நகர்ப்புற மக்களுக்கு விரிவான சுகாதார பரிசோதனை, சிகிச்சைகள் வழங்கப்படுகிறது.

1,353 அவசர ஊர்திகளுடன் 15.09.2008 அன்று 108 அவசரகால பராமரிப்பு சேவை திட்டம் தொடங்கப்பட்டது. தமிழ்நாட்டில் எந்த இடத்தில் இருந்தாலும், அவசர ஊர்தி சேவை மையத்தை தொடர்பு கொண்ட பிறகு 11 நிமிடங்கள் 23 வினாடிகளுக்குள் அவசர ஊர்தி அந்த இடத்திற்கு சென்றடையும் வகையில் மிகச் சிறப்பாக இந்த திட்டம் செயல்பட்டு வருகிறது. அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் 6 முதல் 12 ஆம் வகுப்பு வரை படிக்கும் அனைத்து மாணவர்களுக்கும் கண் பார்வை குறைபாடுகளை கண்டறிய 2009 ஆம் ஆண்டு "கண்ணொளி காப்போம் திட்டம்" தொடங்கப்பட்டது. இன்றுவரை, மொத்தம் 4.25 மில்லியன் குழந்தைகள் பரிசோதிக்கப்பட்டு, 2.7 இலட்சம் மாணவர்களுக்கு கண்ணாடிகள் வழங்கப்பட்டுள்ளன. முன்னாள் முதல்வர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் மகனும், தற்போதைய தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், புதுமையான திட்டங்கள் மூலம், தனது தீவிர உழைப்பாலும், அர்ப்பணிப்பாலும் மக்களுக்கு பல்வேறு நலத்திட்டங்களை செயல்படுத்தி வருகிறார். அனைத்து சாலை போக்குவரத்து விபத்துக்களுக்கும் இலவச அவசர மருத்துவ சிகிச்சை வழங்கும் "இன்னுயிர் காப்போம் நம்மை காக்கும் 48 திட்டம்" 18.12.2023 அன்று தொடங்கி வைத்தார்கள். இத்திட்டத்தின் கீழ் 18.12.2023 முதல் 31.05.2024 வரை, ரூ.2.21 பில்லியன் செலவில் 2,52,981 நோயாளிகள் கட்டணமில்லா சிகிச்சையைப் பெற்றுள்ளனர். இதில் மொத்த பயனாளிகளில் 2,33,039 நோயாளிகள் அரசு மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்றுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

"கலைஞரின் வருமுன் காப்போம் திட்டம்", செப்டம்பர் 29, 2021 அன்று சேலத்தில் உள்ள வாழப்பாடியில் மீண்டும் தொடங்கப்பட்டது. இந்தத் திட்டத்தின் கீழ் 25 வகையான பரிசோதனைகளை, 17 சிறப்பு சிகிச்சைகள் வழங்கப்பட்டு வருகிறது. இதன் மூலம் 202324 வரை மொத்தம் 36,69,326 பேர் பயனடைந்துள்ளனர். ஆய்வக மாதிரிகளைக் கொண்டு செல்வதற்கான "மக்களைத் தேடி ஆய்வகம் திட்டம்" (Hub and Spoke Model) பிப்ரவரி 5, 2024 அன்று 755 ஹப்கள் மற்றும் 2,427 ஸ்போக்குகளை உள்ளடக்கியதாக அறிமுகப்படுத்தப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் மொத்தம் 216 வகையான பரிசோதனைகள் மேற்கொள்ளப்படுகின்றன. திட்டம் தொடங்கப்பட்டதிலிருந்து ஜுன் 2024 வரை, 2,27,000 மாதிரிகள் திறம்பட கொண்டு செல்லப்பட்டு பரிசோதனை மேற்கொள்ளப்பட்டுள் ளது.

இதய பாதிப்புகளை கண்டறிந்து சிகிச்சை வழங்கும் நோக்கில் "இதயம் காப்போம் திட்டம்" 27.06.2023 அன்று கோயம்புத்தூர் மாவட்டம், மலுமிச்சம்பட்டி ஊராட்சியில் தொடங்கி வைக்கப்பட்டது. ஜுன் 2023 மற்றும் ஜுன் 2024 க்கு இடையில், சந்தேகத்திற்கிடமான இதயநோய் அறிகுறிகளுடன் மொத்தம் 8,500 நோயாளிகளுக்கு அவசர மாரடைப்பு மருந்துகள் (Loading Dose) வழங்கப்பட்டு குறிப்பிட்ட காலத்திற்குள் அருகில் உள்ள மருத்துவமனைக்கு செல்ல பரிந்துரைக்கப்பட்டு,அவர்களின் உயிர்கள் காப்பாற்றப்பட்டுள்ளது.

**சிறுநீரகம் பாதுகாப்பு திட்டம்!**

அதேபோல் "சிறுநீரகம் பாதுகாப்பு திட்டம்" 10.07.2023 அன்று சேலம் மாவட்டம், காடையாம்பட்டியில் தொடங்கி வைக்கப்பட்டது. இதன் மூலம் மொத்தம் 4,60,000 நோயாளிகள் பரிசோதிக்கப்பட்டு, 3,361 நோயாளிகள் நாள்பட்ட சிறுநீரக நோய்களுக்கு சந்தேகிக்கப்பட்டு மருத்துவமனைகளுக்கு உயர் சிகிச்சைக்காக பரிந்துரைக்கப்பட்டனர்.

தொழிற்சாலைகளில் உள்ள தொழிலாளர்கள் பயன்பெறும் வகையில் "தொழிலாளரை தேடி மருத்துவம் எனும் திட்டம்" 09.01.2024 அன்று திருவள்ளூர் மாவட்டம், கடம்பத்தூரில் உள்ள Hyundai Mobis தொழிற்சாலையில் தொடங்கப்பட்டது. அந்த திட்டத்தின் மூலம் இதுவரை 486 தொழிற்சாலைகளில் 2,96,652 பேருக்கு பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு 26,471 பேருக்கு பாதிப்புகள் கண்டறியப்பட்டு சிகிச்சைகள் வழங்கப்பட்டுள்ளது.

2008 ஆம் ஆண்டு தமிழ்நாட்டில் இறந்தவர்களிடம் இருந்து உடல் உறுப்புகளை தானமாக பெற்று "உறுப்பு மாற்று அறுவை சிகிச்சை மேற்கொள்ளும் திட்டம்" தொடங்கப்பட்டது. இதன் மூலம் இதுவரை இதயம், நுரையீரல், கல்லீரல், சிறுநீரகம், கணையம், சிறுகுடல், வயிறு, கைகள் என மொத்தம் 7,783 உறுப்புகள், 3,950 சிறிய உறுப்புகள் மற்றும் திசுக்கள் தானமாக பெறப்பட்டு உறுப்பு மாற்று அறுவை சிகிச்சைகள் செய்யப்பட்டுள்ளது. இந்தியாவில் உள்ள 36 மாநிலங்களில், அதிக எண்ணிக்கை யிலான உறுப்பு மாற்று அறுவை சிகிச்சைகளை செய்வதில் தமிழ்நாடு தொடர்ந்து தேசிய அளவில் முதல் இடத்தைப் பிடித்துள்ளது. கலைஞர் அவர்களின் வழியில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உடல் உறுப்பு தானம் செய்பவர்களுக்கு அரசு மரியாதை செய்யப்படும் என்று 23.09.2023 அன்று அறிவித்தார்கள். தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவித்த பிறகு இதுவரை 200 உடல்களுக்கு அரசு மரியாதை செலுத்தப்பட்டுள் ளது.

**மக்களைத் தேடி மருத்துவம்!**

கோவிட்19 தொற்று நோய்க்கு பிந்தைய பாதிப்புகளில் இருந்தும் மக்களுக்கு தேவையான மருத்து வம் அவர்களை சென்றடையும் நோக்கில், "மக்களைத் தேடி மருத்துவம் திட்டம்" தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 05.08.2021 அன்று தொடங்கி வைக்கப்பட்டது, முதல் பயனாளியான கிருஷ்ணகிரி மாவட்டம், சாமனப்பள்ளியில் உள்ள திருமதி.சரோஜம்மாளுக்கு மருந்து பெட்டகங்கள் வழங்கப்பட்டது. இந்த திட்டத்தின் கீழ், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுக் கழகத்தின் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட சுயஉதவி குழுவிலிருந்து பெண் சுகாதார தன்னார்வலர்களின் (WHVs) மருத்துவத் துறையுடன் இணைந்து மக்களுக்கு தேவையான மருந்துகளை அவர்களின் வீடுகளுக்கே சென்று வழங்கி வருகின்றனர். கிராமப்புறங்களில் 8,713 மற்றும் நகர்ப்புறங்களில் 2,256 பேர் என்று மொத்தம் 10,969 பேர் இந்த பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். உயர் இரத்த அழுத்தம் மற்றும் நீரிழிவு நோயாளிகளுக்கு WHV களால் வீட்டிற்கே சென்று மருந்து பொருட்கள் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. தமிழ்நாட்டில் உள்ள 463 பிளாக்குகளில் ஒரு செவிலியர் ஒரு பிசியோதெரபிஸ்ட் அடங்கிய குழுக்கள் இந்த பணியில் ஈடுபட்டு வருகின்றனர். சிறுநீரக நோயாளிகளுக்கு வீடுகளுக்கே சென்று CAPD பைகளை செவிலியர்களை கொண்டு வழங்கும் திட்டமும் தமிழ்நாட்டில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதன் மூலம் பொதுமக்கள் மருத்துவமனைக்கு சென்று ஹீமோடையாலிசிஸ் மேற்கொள்ளும் நடைமுறை தவிர்க்கப்படுகிறது.

மருத்துவச் சேவைகள் மலிவாக கிடைக்கக்கூடிய, அணுகக்கூடியதாக மாற்றுவதன் மூலம் மேம்படுத்தப்பட்ட சுகாதார சேவைகள் அனைவருக்கும் கிடைக்கும் நிலை ஏற்படும். தமிழ்நாடு அரசின் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறையின் அதிக சமபங்கு, சமூக உள்ளடக்கம் மற்றும் சமூகப் பங்கேற்பு மற்றும் சமூகப் பொறுப்புணர்வுடன் செயல்பட்டு வலுவடைந்து வருகிறது.

மக்களைத் தேடி மருத்துவம் திட்ட பயனாளிகளிடமிருந்து அவர்களின் வாழ்வில் இத்திட்டத்தின் நேர்மறையான தாக்கத்தைப் படம்பிடிக்கும் சான்றுகளைக் கொண்ட ஒரு நிமிட காணொலியின் மூலம், மிகவும் விரிவான மற்றும் ஒருங்கிணைந்த முறையில் மக்களுக்கு சேவை செய்ய பாடுபடும் தமிழ்நாடு அரசின் சாதனைகளைப் பகிர்ந்து கொள்வதற்கான இந்த சிறந்த வாய்ப்பிற்காக எனது மனமார்ந்த நன்றியையும் மகிழ்ச்சியையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் மா. சுப்பிரமணியன் உரையாற்றினார்.

### விருதுநகர் மாவட்டம் - சிவகாசி - காளையார்குறிச்சி - தனியார்

# பட்டாசு ஆலையில் விபத்து : உயிரிழந்தோர் குடும்பத்தினருக்கு ஆறுதல் - நிதியுதவி!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

**சென்னை , ஜூலை 11-**

**விருதுநகர் மாவட்டம், சிவகாசி, காளையார்குறிச்சி கிராமத்திலுள்ள தனியார் பட்டாசு ஆலையில் ஏற்பட்ட வெடிவிபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் ஆறுதல் மற்றும் நிதியுதவி அறிவித்துள்ளார்.**

இது தொடர்பாக முதல்வர் அவர்கள் நேற்று வெளியிட்ட அறிவிப்பு வருமாறு:-

விருதுநகர் மாவட்டம், சிவகாசி வட்டம், காளையார்குறிச்சி கிராமத்தில் இயங்கிவரும் தனியாருக்குச் சொந்தமான பட்டாசு ஆலையில் இன்று (09-07-2024) காலை 09.15 மணியளவில் எதிர்பாராதவிதமாக ஏற்பட்ட வெடிவிபத்தில் விருதுநகர் மாவட்டம், வெள்ளூர், சிதம்பராபுரத்தைச் சேர்ந்த மாரியப்பன் (வயது 45) (த/பெ.பெருமாள்) மற்றும் முத்துமுருகன் (வயது 45) (த/பெ.பரமசிவம்) ஆகிய இருவரும் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர் என்ற துயரமான செய்தியைக் கேட்டு மிகுந்த வருத்தமும் வேதனையும் அடைந்தேன்.

மேலும், இவ்விபத்தில் பலத்த காயமடைந்து விருதுநகர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவரும் எம். புதுப்பட்டியைச் சேர்ந்த சங்கரவேல் (வயது 52) (த/பெ.கூடலிங்கம்) மற்றும் திருமதி.சரோஜா (வயது 50) (க/பெ. கொடக்காரசின்னு) ஆகிய இருவருக்கும் சிறப்புச் சிகிச்சை அளிக்கவும் உத்தரவிட்டுள்ளேன்.

இந்த விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கும் அவர்களது உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக் கொள்வதோடு, அவர்களது குடும்பத்தினருக்கு தலா மூன்று இலட்சம் ரூபாயும், பலத்த காயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருபவர்களுக்கு தலா ஒரு இலட்சம் ரூபாயும் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் அவர்கள் அறிவித்துள்ளார்.

### ஆம்ஸ்ட்ராங் கொலை வழக்கு:

# குற்றவாளிகளை கூண்டில் ஏற்ற காவல் துறை தயங்காது!

## எடப்பாடி - மாயாவதிக்கு சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி பதிலடி!

புதுக்கோட்டை ஜூலை 11-

புதுக்கோட்டை ரோஜா இல்லம் என்ற விருதுநகர் மாளிகையில் சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி செய்தியாளர்களை சந்தித்தார். அப்போது அவர் குறிப்பிட்டதாவது:

எடப்பாடி பழனிச்சாமி அவருடைய வழக்கை உயர் நீதிமன்றம் சி.பி.ஐ. விசாரிக்க வேண்டும் என்று உத்தரவிட்டபோது சி.பி.ஐ. விசாரிக்க கூடாது என்று உச்சநீதிமன்றத்திற்கு சென்றவர் அவர். அவர் ஆட்சியில் இருந்தால் சி.பி.ஐ. விசாரிக்கக் கூடாது. அவர் ஆட்சியில் இல்லை என்றால் சி.பி.ஐ. விசாரிக்க வேண்டும். இப்படிப்பட்ட நிலைப்பாடு எடுக்கின்ற எடப்பாடி பழனிச்சாமிக்கு நாங்கள் பதில் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை.

எங்கள் காவல்துறை இதில் நியாயமாக செயல்படும் என்று பாதிக்கப்பட்டவரின் குடும்பத்தினர் நம்புகிறார்கள். அந்த இயக்கத்தை சேர்ந்தவர்களும் நம்புகிறார்கள். இதில் ஒருதலை பட்சமாக நடவடிக்கை எடுக்க வேண்டிய அவசியம் எங்களுக்கு கிடையாது தமிழ்நாடு முதலமைச்சருக்கும் கிடையாது. இந்த சம்பவத்திற்கு பொறுப்பானவர்களை நிச்சயமாக தண்டனை வாங்கி தருகின்ற அளவிற்கு நமது அரசு செயல்படும்.

இயக்குனர் ரஞ்சித்துக்கு விமர்சனத்திற்கு பதில் அளித்த அமைச்சர் எஸ்.ரகுபதி சமூக நீதியை கட்டி காப்பதில் இந்தியாவிலேயே தி.மு.க.வுக்கும் இந்தியா கூட்டணிக்கும் இணையாக வேறு எந்த கட்சியும் கிடையாது. வேறு யாரையும் சொல்ல முடியாது.

சமூகநீதியை பாதுகாக்க வேண்டும், சமூகநீதியை போற்ற வேண்டும், சமூக நீதியை பாதுகாப்பதில் யாருக்கும் விட்டுக் கொடுக்க அவசியம் கிடையாது. ஏனென்றால் ஒடுக்கப்பட்டவர்களுக்காகவும், தாழ்த்தப்பட்டவர்களுக்காகவும் பாடுபடுகின்ற இயக்கம்தான் தி.மு.க.

ஒடுக்கப்பட்டவர்களை தூக்கி விட வேண்டும் முன்னேற்றமடைய வைக்க வேண்டும் என்பதற்காக உருவான இயக்கம் தி.மு.க. இது ஏழை மக்களுடைய இயக்கம் அப்படிப்பட்ட இந்த இயக்கத்தில் தனிப்பட்ட எந்த மனிதர்களுக்காக வேண்டி பணிந்து போக வேண்டிய அவசியமும் அவர்களை விட்டுக் கொடுக்க வேண்டிய அவசியமும் கிடையாது. அவர் எப்படிப்பட்ட மனிதனாக இருந்தாலும் அவர் மீது குற்றம் சுமத்தப்பட்டால் குற்றவாளி கூண்டில் ஏற்றுவதற்கு தமிழ்நாட்டின் காவல்துறை என்றைக்குமே தயங்காது.

ஓ.பி.எஸ். அவரது காலத்தை மறந்து விட்டார். எடப்பாடி பழனிச்சாமியும் அவர்களது காலத்தை மறந்து விட்டார். நாங்கள் சட்டமன்றத்திலேயே கூறியுள்ளோம். ஒவ்வொரு ஆட்சியிலும் இதுபோன்ற சம்பவங்கள் நடைபெறும்.

அப்படி நடக்கின்ற சம்பவங்கள் அது ஆட்சியாளர்களாலா இல்லையா என்பதை தான் பார்க்க வேண்டும். நாங்கள் நடைபெறக்கூடிய சம்பவங்களை தடுத்திருக்கிறோம் தடுக்க முயற்சி செய்திருக்கிறோம். அதை தூண்டி விடுவது நாங்கள் கிடையாது. நாங்கள் எடுத்திருக்கும் கடுமையான நடவடிக்கையை போல் எந்த அரசும் நிச்சயம் எடுக்க முடியாது. யாரும் எங்களுக்கு வேண்டியவர்கள் அல்ல எங்களது கட்சிக்காரர்களும் அல்ல.

அதே நேரத்தில் கடந்த காலத்தில் பொள்ளாச்சி சம்பவங்கள் எல்லாம் பார்த்தால் யார் சம்பவத்தில் ஈடுபட்டார்கள் என்பதெல்லாம் அனைவருக்கும் தெரியும். அப்படிப்பட்ட சூழ்நிலை தற்போது கிடையாது அந்த நிலையும் கிடையாது என்று சட்டம் ஒழுங்கு பாதுகாக்கப்படுவதால் தான் நாம் சுதந்திரமாக நடந்து வருகின்றோம்.



தமிழ்நாட்டில் இருக்கும் சுதந்திரத்தை போல் இந்த அளவிற்கு வேறு எந்த மாநிலத்திலும் கிடையாது. அதற்காக மற்ற மாநிலத்தை நாங்கள் குறை சொல்லவில்லை. ஆனால் முழு உரிமை முழு சுதந்திரம் என்று தமிழ்நாட்டில் உள்ளது.

ஒரு ஆர்ப்பாட்டம் நடைபெற்றால் அவர்களை நேரில் சந்தித்து பேசி குற்றவாளிகள் யாராக இருந்தாலும் தண்டிக்கப்படுவார்கள் என்று சொல்லி வருகின்ற ஆட்சிதான் தற்போதைய ஆட்சி. யாரையும் சந்திக்க அஞ்சுகின்ற ஆட்சி மு க ஸ்டாலின் ஆட்சி அல்ல. யாராக இருந்தாலும் அவர்களை நேரடியாக சந்தித்து அதை கையாளுகின்ற திறமை உடைய முதலமைச்சர் தான் தமிழ்நாடு முதலமைச்சர். நிச்சயம் இரும்பு கரம் கொண்டு இப்படிப்பட்டவர்களை அடக்குவார். இதனால் திமுகவுக்கு எந்த விதத்திலும் தேர்தலுக்கும் இதற்கும் சம்பந்தம் கிடையாது மீண்டும் திமுக தான் தொடர்ந்து ஆட்சிக்கு வரும் அதை தடுக்க இங்கு எந்த சக்தியும் வரவில்லை. மாயாவதி அவரது ஆட்சி காலத்தை மறந்து விட்டார்.

உத்திரபிரதேசத்தில் அப்போது எப்படி எல்லாம் ஆட்சி செய்தார்கள் என்பது அனைவருக்கும் தெரியும். அதனால் தான் உத்திர பிரதேசத்தில் ஆட்சியிலிருந்து அவர் ஒதுக்கப்பட்டிருக்கிறார்.

அவ்வாறு இருந்தாலும் நாங்கள் அவரையும் மதிக்க கூடியவர்கள். அவர்களை நாங்கள் வெறுக்கவில்லை. அவர் ஆம்ஸ்ட்ராங்கின் கொலை வழக்கை சி.பி.ஐ.க்கு மாற்ற வேண்டும் என்று அவரது கருத்தை சொல்லி இருக்கிறார். ஆனால் மற்றவர்கள் எல்லோரும் தமிழ்நாடு காவல்துறை மீது நம்பிக்கை இருக்கிறது என்பதை வெளிப்படுத்தி இருக்கிறார்கள் இதில் காவல்துறை சிறப்பாக செயல்பட்டு தங்களது திறமையை வெளிப்படுத்தும் என்று அமைச்சர் எஸ்.ரகுபதி தெரிவித்தார்.

### அம்மாப்பேட்டை பி.என்.சேகர் தாயார்

# திருமதி. பி.வள்ளியம்மாள் மறைவு!

## மாவட்டச் செயலாளர் என்.நல்லசிவம் அஞ்சலி!

ஈரோடு, ஜூலை 11 -

ஈரோடு வடக்கு மாவட்டம் அம்மாப்பேட்டை முன்னாள் ஒன்றிய கழக செயலாளரும், முன்னாள் தலைமைச் செயற்குழு உறுப்பினருமான பி.என். சேகர் மற்றும் நெரிஞ்சிபேட்டை பேரூர் கழக செயலாளர் பி.என்.கண்ணன் தாயாருமான பி.வள்ளி யம்மாள் 9.7.2024 செவ்வாய்க் கிழமை அதிகாலை இயற்கை எய்தினார் என்கிற செய்தியினை அறிவிக்க வருந்துகிறோம்.

அன்னாரின் மறைவு செய்தியறிந்த ஈரோடு வடக்கு மாவட்ட கழக செயலாளர் என்.நல்லசிவம் உள்ளிட்ட மாநில, மாவட்ட, நகர, ஒன்றிய, பேரூர், வார்டு கழக நிர்வாகிகள், அனைத்து அணிகளின் நிர்வாகிகள், கழக உடன்பிறப்புகள் பலர் மலர் மாலை வைத்து அஞ்சலி செலுத்தினார்கள்.

அன்னாரின் இறுதி சடங்கு 9.7.2024 செவ்வாய்க் கிழமை நண்பகல் 1 மணியளவில் நடைபெற்றது.



விக்கிரவாண்டி தொகுதி சிந்தாமணி, முண்டியம்பாக்கம், ஆசூர், சாத்தனூர், பொன்னங்குப்பம், வி.சாலை, விக்கிரவாண்டி பேரூராட்சிக்கு உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில், விக்கிரவாண்டி தொகுதி வெற்றி வேட்பாளர் அன்னியூர் சிவாவின் தலைமை முகவரும் விழுப்புரம் தெற்கு மாவட்டப் பொறுப்பாளருமான டாக்டர் பொன்.கௌதமசிகாமணி வாக்குசாவடிகளைப் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.




தஞ்சாவூர் நாடாளுமன்ற தொகுதியில் வெற்றி பெற்ற நாடாளுமன்ற உறுப்பினர் ச.முரசொலி நீடாமங்கலம் ஒன்றியத்தில் நன்றி கூறினார்.இந்த நிகழ்ச்சியில் சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் – சட்ட திருத்த குழு உறுப்பினர் பி.இராசமாணிக்கம், தலைமைச் செயற்குழு உறுப்பினர் சு.ஞானசேகரன், ஒன்றிய பெருந்தலைவர் சோம.செந்தமிழ்ச் செல்வன்,ஒன்றிய செயலாளர்கள் கே.வி.கே.ஆனந்த், நா.கவியரசு, பேரூர் செயலாளர் இரா.இராஜசேகரன், பேரூராட்சி தலைவர் ஆர்.ஆர். ராம்ராஜ், பொதுக்குழு உறுப்பினர் பி.கமாலுதீன் மாவட்ட மகளிர் அணி தலைவர் ராணி சேகர், மாவட்ட ஊராட்சி உறுப்பினர்கள் ராணி சுந்தர், சங்கீதா செல்வேந்திரன் மற்றும் இந்தியா கூட்டணி நிர்வாகிகள் அனைத்து அணிகளின் நிர்வாகிகள் உள்ளாட்சி பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.